**தலைப்பு 226 - குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்**

------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 226 – குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை தொடர்பான கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக்

காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) வருமானப் பெறுவனவுகள்

திணைக்களத்திற்குரிய வருமானப் பெறுவனவுகளைக் கணக்கீடு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான ஆரம்ப மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா. 25,500,000,000 ஆக இருந்ததுடன், திருத்தப்பட்ட மதிப்பீட்டு வருமானம் ரூபா. | வித்தியாசமானது ஆரம்ப மதிப்பீட்டின் சதவீத ரீதியில் 10 சதவீதமாக இருந்த போதிலும், திருத்தப்பட்ட மதிப்பீட்டின் வித்தியாசமாக திருத்தப்பட்ட மதிப்பீட்டின் மொத்த பெறுமதி | நிதிக் கூற்று தயாரிக்கும் போது சரியாகக் கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளில் காட்டப்படுதல் |

| | | |
|---|---|---|
| 28,100,000,000 ஆகும். அந்த ஆரம்ப வருமான மதிப்பீட்டினை விட 10 சதவீதமாக இருந்த போதிலும், ஏசிஏ - 1(ii) இல் ஆரம்ப மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு என்பவற்றுக்கிடையேயான மாறுபாட்டினை தெளிவுபடுத்தும் கூற்றில் அந்த பெறுமதி 110 எனக் காட்டப்பட்டிருந்தது. | பயன்படுத்தப்பட்டுக் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் 110 சதவீதம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், எதிர்காலத்தில் இவ்வாறான கணக்கீடுகளுக்கு அதிக கவனத்தை செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். |

**(ஆ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்களின் முற்பண 'பி' கணக்கிற்கு அமைய வருட இறுதியில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மீதி ரூபா. 131,422,838 ஆன போதிலும், தனி மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்த மீதி ரூபா. 130,983,010 ஆக இருந்தது என்பதனால், ரூபா. 439,828 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு தொடக்கம் அறிக்கையின் தினம் வரையிலும் இந்த வித்தியாசத்திற்குரிய காரணத்தினைக் கண்டறிந்து அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையே 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இறுதி வரவு மீதி, ஒற்றை மீதி பட்டியலுடன் ஒத்திருக்காததுடன் அடிப்படையில் 2019.12.31 ஆம் திகதியில் ரூபா. 480,793 ஆன வித்தியாசம் ஏற்பட்டிருந்தது எனவும், அந்த வித்தியாசத்தில் ரூபா. 40,965 ஆன தொகை சரி செய்யப்பட்டுள்ளது எனவும், இன்னமும் வித்தியாசமாக காணப்படும் ரூபா. 439,828 இல் கணக்கிற்கு சீர் செய்யப்படக்கூடிய ரூபா. 103,629 ஆன கடன் மீதி வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனால், எதிர்காலத்தில் அதனை சரி செய்வதற்கும் ஏனைய இனம் காணப்பட்ட கடன் மீதிகளை வெளிப்படுத்துவதற்காக பிரச்சனைக்குரிய கணக்குகளை மீண்டும் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | குறித்த வித்தியாசத்திற்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## (இ) கட்டுப்பண மீதி

கட்டுப்பண மீதியினை கணக்கீடு செய்யும்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில். ரூபா. 10,851,787 ஆன கட்டுப்பண மீதி திறைசேரிக்குத் தீர்க்கப்பட்டிருந்த போதிலும், அத்திகதியிலான நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறை பொறுப்பின் கீழ் அந்த மீதி காட்டப்பட்டிருந்தது. | நிதி நிலைமைக் கூற்று தயாரிக்கும் போது தவறுதலாக நடைமுறைப் பொறுப்பின் கீழ் வருட இறுதியில் திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட ரூபா. 108,517,875 ஆன தொகை உள்ளடக்கப்பட்டு இருந்தது எனவும், அதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றின் மொத்த சொத்துக்கள் மொத்த பொறுப்புக்களுக்கு சமமாகவில்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிக் கூற்று சரியாக தயாரிக்கப்பட்டு, பரீட்சித்து செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## (ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடுகள் முறையாக மற்றும் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு இருக்கவில்லை என மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புகளில் அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கையின் இணக்க அறிக்கைக்கு அமைய திணைக்களத்தின் பொறுப்புக்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வரவில்லை எனக் காட்டப்பட்டிருந்த போதிலும், கணக்குகளில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் செலவு விடய இலக்கம் 22 6-1-1-1301 இல் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா. 18,670,810 ஆன பொறுப்புப் பெறுமதி பொறுப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், தவறுதல் காரணமாகப் பொறுப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. | பொறுப்புக்கள் பதிவேட்டில் வருடத்திற்குரிய பொறுப்புப் பெறுமதி அனைத்தும் உள்ளடக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **(அ)** | 2015 ஜூலை 20 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2015 கொண்ட அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 7 ஆவது பந்தியின் பிரகாரம் காலாண்டு வருமான அறிக்கை அந்தக் காலப் பகுதி முடிவடைந்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு தொடர்ச்சியாக அனுப்பப்பட வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டு வருமான அறிக்கை அனுப்பப்பட்டிருந்தது 2023 மே 26 ஆம் திகதியே ஆகும். | 2023 மார்ச் மாதம் தொடக்கம் வருமானம் நேரடியாக பொதுத் திறைசேரி கணக்கிற்கு மாற்றப்படுதல் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால் வருமான இணக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த காலாண்டு வருமான அறிக்கை திறைசேரிக்கு சமர்ப்பித்தல் தாமதமடைந்தது எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(ஆ)** | திணைக்களத்தின் ஆரம்ப வருமான மதிப்பீட்டினை விடத் திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு 10 சதவீதத்தினால் அதிகரித்து இருந்ததுடன், திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டினை விட உண்மையான வருமானம் 52 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இதற்கு அமைய வருமான கணிப்பீடு சரியான ஆய்வுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடொன்றைத் தயாரிக்கும் போது கடந்த 6 மாத வருமான ஈட்டல்கள், எதிர்வரும் காலப் பகுதியினுள் ஏற்படக்கூடிய ஏற்றத் தாழ்வுகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டது எனவும், நிதிப் பிரமாணம் 175 (1) இன் பிரகாரம் அனுமானங்கள் மற்றும் கணிப்புகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளுவதற்கு நேரிட்டுள்ளது என்பதுடன், 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டு 2023 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதிலும், மதிப்பீடு செய்யப்பட | திணைக்களத்துக்குக் கிடைக்கக் கூடிய வருமானங்கள் சரியான ஆய்வுடன் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முடியாத காரணிகளின் அடிப்படையில் மதிப்பீடு மற்றும் உண்மையான நிலைமைகளுக்கு இடையில் சாதகமான மாற்றம் ஏற்படக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | |

**2.2 செலவின முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | மீளாய்வாண்டில் 06 செலவின விடயங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா. 908,140,000 இல் ரூபா.357,000,000 நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் வேறு செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டு இருந்ததுடன், அது 30 சதவீதத்திற்கும் 300 சதவீதத்திற்கும் இடைப்பட்ட தொகையினைக் கொண்டிருந்தது. அதற்கமைய செலவு மதிப்பீடு தயாரித்தல் சரியான ஆய்வுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டினைத் தயாரித்தல் 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மேற்கொள்ளப்பட்டது என்பதனால், அந்த காலப் பகுதியினுள் தேசிய பொருளாதாரத்தில் ஏற்பட்டிருந்த பொருளாதார செயற்பாடுகளின் சுருக்கங்கள், அந்நிய செலாவணி சிக்கல்கள் மற்றும் அசாதாரணமாக சந்தை விலை அதிகரித்துச் சென்றமை போன்ற காரணங்களினால் வருமானம் மற்றும் செலவுக் கணிப்புகளை நடைமுறையில் மேற்கொள்ளுதல் கடினமானது என தெரிவிக்கப்பட்டிருந்தது. | செலவு மதிப்பீடு தயாரித்தலானது சரியான ஆய்வுடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| **(ஆ)** | 08 மீண்டெழும் செலவு விடயங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா. 768,850,000 நிதியில் ரூபா. 372,479,363 மீதமாக இருந்ததுடன், அந்த மீதி 30 சதவீதம் தொடக்கம் 63 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டினைத் தயாரித்தல் 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மேற்கொள்ளப்பட்டது என்பதனால், அந்த காலப் பகுதியினுள் தேசிய பொருளாதாரத்தில் ஏற்பட்டிருந்த பொருளாதார செயற்பாடுகளின் சுருக்கங்கள், அந்நிய செலாவணி சிக்கல்கள் | செலவு மதிப்பீடு தயாரித்தலானது சரியான ஆய்வுடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் அசாதாரணமாக சந்தை விலை அதிகரித்துச் சென்றமை போன்ற காரணங்களினால் வருமானம் மற்றும் செலவுக் கணிப்புகளை நடைமுறையில் மேற்கொள்ளுதல் கடினமானது என தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| **(இ)** | 02 மூலதன செலவு விடயங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா. 111,500,000 ஆன நிதியில் ரூபா. 26,796,273 மீதமாகி இருந்ததுடன், அந்த மீதி 22 சதவீதம் தொடக்கம் 36 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டினைத் தயாரித்தல் 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மேற்கொள்ளப்பட்டது என்பதனால், அந்த காலப் பகுதியினுள் தேசிய பொருளாதாரத்தில் ஏற்பட்டிருந்த பொருளாதார செயற்பாடுகளின் சுருக்கங்கள், அந்நிய செலாவணி சிக்கல்கள் மற்றும் அசாதாரணமாக சந்தை விலை அதிகரித்துச் சென்றமை போன்ற காரணங்களினால் வருமானம் மற்றும் செலவுக் கணிப்புகளை நடைமுறையில் மேற்கொள்ளுதல் கடினமானது என தெரிவிக்கப்பட்டிருந்தது. | செலவு மதிப்பீடு தயாரித்தலானது சரியான ஆய்வுடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| **(ஈ)** | செலவு விடய இலக்கம் 1-1-0-1003 இல் ரூபா. 126,535 உம் செலவு விடய இலக்கம் 1-1-0-2502 (99) இல் ரூபா. 260,633 உம் மீதியாக இருக்கையில் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் முறையே ரூபா. 2,800,000 உம் மற்றும் ரூபா. 2,000,000 உம் மாற்றப்பட்டிருந்ததுடன், இரு செலவு விடயங்களிலும் இருந்த மீதி மற்றும் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த ரூபா. 4,800,000 ஆன தொகை வருட இறுதியில் மீதியாகக் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டினுள் நிகழ்நிலை முறையில் கடவுச்சீட்டுக்கள் வழங்குவதற்காக விரல் அடையாளத்தினைப் பெற்றுக் கொள்வதற்காகத் திறக்கப்பட்ட ஐம்பது (50) பிரதேச அலுவலகங்களின் பதவியணியினரது ஊக்குவிப்புத் தொகைக்கான நிதி ஒதுக்கீடு முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்காமை போன்றே எதிர்பார்க்கப்பட்ட செலவினை மேற்கொள்ளுவதற்கு | செலவுகள் மேற்கொள்ளப்படாது செலவு விடயங்களில் நிதி மீதியாக இருக்கும்போது நிதிப் பிரமாணம் 66 இன் கீழும் மேலும் நிதியினை மாற்றி நிதியினை சேகரித்து வைத்திருக்கலாகாது. |

| | | | |
|---|---|---|---|
| | | நேரிட்டிருக்காமை போன்ற காரணங்களினால் 1003 செலவு விடயத்தில் மற்றும் 2509 (99) செலவு விடயத்தில் காட்டப்பட்டிருந்து மீதி இடம் பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| **(உ)** | 02 மீண்டெழும் செலவு விடயங்களின் ஆரம்ப செலவு மதிப்பீடான ரூபா. 86,300,000 ஆன தொகை ரூபா. 195,300,000 வரையில் 122 சதவீதம் தொடக்கம் 300 சதவீதம் வரையிலும், இரு மூலதன செலவு விடயங்களின் ஆரம்ப செலவு மதிப்பீடான ரூபா. 1,354,000,000 ஆன தொகை ரூபா. 2,347,100,000 வரையில் 73 சதவீதம் தொடக்கம் 78 சதவீதம் வரையிலுமான வீச்சில் திருத்தப்பட்டிருந்தது. | கோரப்பட்டிருந்த பாதீட்டு நிதி கிடைத்திருக்காமை, மீளாய்வாண்டினுள் சேவை வழங்கும் நிறுவனங்களால் மாதாந்தம் அறவிடப்படும் சேவைக் கட்டணம் (மின்சாரம், நீர் போன்றவை) அதிகரித்தமை போன்றே திணைக்கள ரீதியிலான சேவைகளுக்கு ஏற்பட்டிருந்த அதிக கேள்வி காரணமாக (கடவுச்சீட்டுக்கள், பயணிகள் அனுமதி நடவடிக்கைகள் போன்றவை) செலவுகளில் ஏற்பட்டிருந்த அதிகரிப்பின் அடிப்படையிலான அவதானிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த வகையில் மேலே கூறப்பட்ட சதவீதத்தில் நிதி ஒதுக்கீட்டினை மாற்றுவதற்கு நேரிட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | செலவு விடயங்களுக்குத் தேவையான செலவுகள் சரியாகக் கணிப்பீடு செய்யப்பட்டு தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான வகையில் செலவு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 255/2017 கொண்ட அரச கணக்கீட்டு சுற்றறிக்கையின் (04) ஆவது பந்தியின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் | 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் செலவுகளுக்குத் தேவையான கட்டுநிதி திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடம் இருந்து | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் சிகாஸ் இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டிய போதிலும், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக அவ்வாறு அறிக்கை இடப்பட்டு இருக்கவில்லை. | பெற்றுக் கொள்ளப்படுகின்றது என்பதனால், பொறுப்புக்களை அறிக்கையிடுவதற்கு நிகழ்நிலை முறைமையில் ITMIS கணினி மென்பொருள் அறிமுகப்படுத்தியிருந்த வசதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதே நேரத்தில் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்குமான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் CIGAS வேலைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு ஏற்ற வகையில் வழிமுறை ஒன்றினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாண ஒழுங்கு விதிகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விவரிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளன.

| | **அவதானிப்புக்கள்** | | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன ான தொடர்பு** | **பெறுமதி ரூபா.** | **இணங்காமை** | | |
| i | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 565 (5) | | நிதிப் பிரமாணத்தில் பிரகாரம் பொது 71 படிவத்தில் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்பு பொழிப்புக் கூற்றினைக் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப் பிரமாணம் 565 (5) இற்கு அமைய மாதாந்த வைப்பு இணக்கக் கூற்றின் பொழிப்பை எதிர்காலத்தில் அனுப்புவதற்கு விடய உத்தியோகத்தர் | தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | . | . அறிவுறுத்தப்பட்டுளளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| 750 (1) | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் திணைக்களத்தில் காணப்படும் குழு மற்றும் ஒதுக்கப்பட்ட வாகனங்களில் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த திணைக்களத்துக்கு சொந்தமான அனைத்து வாகனங்களும் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை மீறும் வெளிநாட்டவர்களைக் கைது செய்வதற்கு மற்றும் விசாரணை நடவடிக்கைகளுக்காக சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றன என்பதனால் இந்த வாகனங்களில் அரச இலச்சினையை பொறிப்பதன் மூலம் விசாரணை நடவடிக்கைகளில் சிக்கல் நிலைமை ஏற்படும் என்பதனால், திணைக்களத்தின் பெயரினைக் கொண்ட அட்டை முன்னால் தெரியும் வகையில் வாகனத்தின் முன்பக்க கண்ணாடியின் உட்புறத்தில் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii | அரச நிர்வாக சுற்றறிக்கை<br><br>2018 ஜனவரி 24 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02/2018 கொண்ட சுற்றறிக்கையின் (05) ஆவது பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில் லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் குறித்த படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு அடுத்த வருடத்தின் மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படுத ல் வேண்டும். |
| | 2016 திசெம்பர் 22 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 30/2016 கொண்ட சுற்றறிக்கையின் (3.1) ஆவது பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்துக்கு சொந்தமான 02 வாகனங்களைத் தவிர மீதி வாகனங்களில் 2013 ஆம் ஆண்டின் பின்னர் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவ ில்லை. | எரிபொருள் பரீட்சிப்பினை மேற்கொள்ளுவதற் கான பரீட்சிப்புக் குழு தற்போது நியமிக்கப்பட்டுள்ள து எனவும், குழு வாகனங்களின் கடமை நடவடிக்கைகளுக் கு தடை ஏற்படாத வகையில் எதிர்காலத்தில் எரிபொருள் பரீட்சிப்பில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்து க்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்ப டுதல் வேண்டும். |
| iii | அரச நிதிச் சுற்றறிக்கை<br><br>2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02/2020 கொண்ட சுற்றறிக்கையின் 12 (அ) ஆவது பந்தி | சுற்றறிக்கையில் பிரகாரம் தற்போது சேவையில் உள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கவி ல்லை. | தற்போது சேவையில் உள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டு ள்ளனர் எனவும், அது அமைச்சின் செயலாளரினால் | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகளை நிறைவேற்றாமை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கு உரிய முன்னேற்ற அறிக்கைக்கு அமைய 50 லேப்டொப் கணணிகளை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதன் நிதி முன்னேற்றம் 0 சதவீதமாக இருந்ததுடன், பௌதிக முன்னேற்றம் 45 சதவீதம் ஆகும். அதற்கு அமைய குறித்த பணி திட்டமிடப்பட்ட வகையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பதில் தெரிவித்திருந்த விலை மனுதாரர் குறித்த காலத்தில் பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காததால் குறித்த பெறுகை திட்டமிடப்பட்ட காலத்தினுள் நிறைவேற்றப்பட்டிருக்காதுடன், 2024 ஆம் ஆண்டு செயற்பாட்டு திட்டத்தின் கீழ் இதற்கான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட வகையில் பணிகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தினை அடையாமை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தகவல் தொழில்நுட்பப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கைக்கு அமைய நிகழ்நிலை முறைமையின் ஊடாக உடனடி சேவை மற்றும் சாதாரண சேவையின் கீழ் கிடைத்திருந்த 113,916 கடவுச்சீட்டு விண்ணப்பங்களிடையே 48,770 கடவுச்சீட்டுக்கள் அதாவது 43 சதவீதம் மட்டும் வருடத்தினுள் | கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கு உரியதாகக் காணப்படும் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காகப் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பான பொது அறிவுரைகளைத் தயாரித்து வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் கடவுச்சீட்டு பிரிவு | கிடைத்துள்ள கடவுச்சீட்டு விண்ணப்பங்களுக்கு உடனடியாகக் கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்ததுடன், பல்வேறு குறைபாடுகளுடனான 65,146 கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதற்காக உள்ளன.<br><br>சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களில் காணப்படும் குறைபாடு காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதுடன், இந்த குறைபாடுகளைச் சரி செய்து வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கு வெளிநாட்டு கடவுச்சீட்டு விண்ணப்பதாரிகளுக்கும் அத்துடன் திணைக்களத்திக்கும் மேலதிக நேரம் மற்றும் செலவினை ஏற்க நேரிட்டிருந்தது. | மேற்கொண்டுள்ளது எனவும், நிகழ்நிலை கடவுச்சீட்டு வழங்குவதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு தேவையான பயிற்சி தற்போது வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டின் பொருட்கள் கணிப்பாய்வு அறிக்கைக்கு அமைய, திணைக்களத்திற்குச் சொந்தமான மத்தளை, பலாலி, இரத்மலானை மற்றும் கட்டுநாயக்க விமான நிலைய அலுவலகங்கள் மற்றும் ஓய்வு கூடம், திருகோணமலை, கொழும்பு மற்றும் காலி துறைமுக அலுவலகம் மற்றும் ஓய்வு கூடத்தில் அமைந்துள்ள கணனி போன்ற இயந்திரங்களின் பராமரிப்பிற்கான தனியார் நிறுவனத்தினால் ஒழுங்கற்ற முறையில் அந்த உபகரணங்களை மாற்றுதல், திருத்த வேலைகளுக்காகக் கொண்டு செல்லுதல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும், அலுவலகத்தில் உள்ள ஏனைய பொருட்களை திணைக்களத்தின் வேறு அலுவலகத்திற்கு அல்லது பிரதான அலுவலகத்திற்குக் | ஒரு பிரிவிலிருந்து வேறு பிரிவிற்குப் பொருட்களைக் கொண்டு செல்லும்போது முறையான வகையில் விநியோகித்தல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல் கட்டளை பயன்படுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், திருத்த வேலைகளுக்குக் கொண்டு செல்லும்போது ஒழுங்கான முறையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | குறித்த பொருட்களைத் திருத்த வேலைகளுக்காகக் கொண்டு செல்லுதல், உபகரணங்களை மாற்றுதல் என்பன முறையான அனுமதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அலுவலகத்தில் உள்ள உபகரணங்களைக் கொண்டு செல்லும்போது பொருட்களை விநியோகித்தல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல் கட்டளை |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டு செல்லும்போது அல்லது திருத்த வேலைகளுக்காகக் கொண்டு செல்லும்போது முறையான ஆவணத்தின் ஊடாக அது மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | | பயன்படுத்தப்பட்டு ஒழுங்கான முறைமைக்கு அமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டு பொருட்கள் கணிப்பாய்வு சபையின் அறிக்கைக்கு அமைய திக்ஓவிட்ட துறைமுக அலுவலகத்திற்கு 2021 ஏப்ரல் 06 ஆம் திகதி பிரிண்டர் ஒன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், இருப்புப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருக்காதனுடன், அது பயன்படுத்தப்படாது உறைகளுடனேயே துறைமுகப் பிரிவில் வைக்கப்பட்டிருந்ததுடன், 2020 ஓகஸ்ட் 11 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த 03 All in one கணணிகளும் 03 வருடங்களாகப் பயன்படுத்தப்படாது உறைகளுடனேயே இருந்ததுடன் அதன் உத்தரவாத காலமும் முடிவடைந்திருந்தது. | திக்ஓவிட்ட அலுவலகத்திற்கு விநியோகக் கட்டளை இலக்கம் A/32 205352 மற்றும் A/32 205351 இன் கீழ் வழங்கப்பட்டிருந்த Lexmark பிரிண்டர் மற்றும் 03 All in one கணினிகள் தற்போது ஒழுங்கான முறையில் கொழும்பு துறைமுக அலுவலகத்தில் பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | பொருட்களை வழங்கும் போது மற்றும் பெற்றுக் கொள்ளும் போது இருப்புப் பதிவேடுகளில் குறிப்பு இடப்பட வேண்டியதுடன், அந்த பொருட்களுக்கான விநியோகித்தல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல் கட்டளைகளைப் பயன்படுத்தி ஒழுங்கான முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அலுவலகத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன், பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்களை செயல்பாடின்றி வைத்திருத்தல் ஆகாது. |

## 3.4 முகாமைத்துவ குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி மரணித்த உத்தியோகத்த ஒருவரது இடர் கடனாக ரூபா. 54,757 ஆனது 05 வருடங்களை விட அதிக காலம் தொட்டும், ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரது இடர் கடனாக ரூபா. 150,683 ஆனது ஒரு வருடத்திற்கும் அதிக காலம் தொட்டும், வேலை இடைநிறுத்தப்பட்ட 02 உத்தியோகத்தர்களது இடர் கடனாக ரூபா. 252,124 ஆனது 02 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்கள் வரையிலான காலம் தொட்டும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியை ஏடுகளில் இருந்து நீக்குவதற்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்கும் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் அறிவுறுத்தப்பட்டு கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கும், ஒழுக்காற்று கட்டளைக்கு அமைய கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியை ஓய்வூதியம் தயாரிக்கும் போது அறவிடுவதற்கும், வேலை நிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தரிடம் இருந்து கடனை அறவிடுவதற்கு சட்டரீதியான ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | குறித்த கடன் மீதிகளை விரைவில் அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஓகஸ்ட் 29 ஆம் திகதி தொடக்கம் இதுவரையிலும் பத்திரமுல்ல சுஹுருபாய கட்டடத்தின் முதலாவது மாடி தொடக்கம் ஏழாவது மாடி வரையில் மற்றும் பியஸ வளாகத்தின் ஒரு பகுதியில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகம் வாடகை அடிப்படையில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் மொத்தமாக ரூபா. 2,307,736,815 பாதுகாப்பு அமைச்சுக்கு வாடகை மற்றும் பராமரிப்பு செலவாக செலுத்தப்பட்டுள்ளது எனினும், இதுவரையில் அது தொடர்பான | இலக்கம் அமப/17/0171/703/014-1 கொண்டதும் மற்றும் 2017.04.26 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய நிதி பிரிவின் மூலம் கட்டட வாடகை நிதி பாதுகாப்பு அமைச்சுக்கு செலவு தலைப்பின் ஊடாக செலுத்தப்பட்டுள்ளது எனவும், பாதுகாப்பு அமைச்சின் இலக்கம் MOD/TEC/8/SPI/2018(185) கொண்டதும் 2018. 04.18 ஆம் திகதி இடப்பட்ட மற்றும் இலக்கம் MOD/TEC/8/SPI/2021(16) கொண்டதும் 2021.01.18 ஆம் திகதி இடப்பட்ட சுஹுருபாய | வாடகை அடிப்படையில் கட்டடத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் முறையான ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கட்டடத்தின் நில வாடகைக்கான தொகையினை அறவிடுதல் எனும் தலைப்பில் வழங்கப்பட்டிருந்த கடிதத்தின் மூலம் மாதாந்தம் செலுத்தப்பட வேண்டிய தொகை தொடர்பில் தெரிவிக்கப்பட்டு இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | பத்தரமுல்ல சுஹுருபாய கட்டடத்தின் முதலாவது மாடியில் 04 வங்கிகளுக்கு கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு இடவசதி ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும், அந்த நிறுவனங்களிடம் இருந்து வாடகை அல்லது வேறு கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தேசிய பாதுகாப்பு தொடர்பான அரச அமைச்சின் செயலாளரது அனுமதியின் அடிப்படையில் இந்த வங்கி உப அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளது எனவும், திணைக்களத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட அந்த அலுவலகங்களுக்கு மிகவும் சிறிய இட அளவே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனால் குத்தகை, நீர் அல்லது மின்சாரத்திற்காக கட்டணத்தினை அறவிடுதல் மேற்கொள்ளப்படவில்லை எனவும், இது தொடர்பில் அமைச்சின் அறிவுரையை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | ஒழுங்கான வழிமுறையின் கீழ் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) | குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் ஊக்குவிப்புத் தொகை முறைமை திருத்தப்பட்டு 2012 செப்டம்பர் 05 ஆம் திகதி பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிர்வாக பணிப்பாளர் நாயகத்தினால் இலக்கம் EST-8/ALLOW /04/125/02 இன் கீழ் அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. | | |

| | | | |
|---|---|---|---|
| i. | மேலே கூறப்பட்ட கடிதத்திற்கு அமைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கும் முறைமைக்கு திறைசேரியின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அந்த இணக்கப்பாட்டினைப் பெற்றுக் கொண்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்வாகப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் EST-8/ALLOW /04/125/02 கொண்டதும் மற்றும் 2012.09.05 ஆம் திகதி இடப்பட்டதுமான கடிதம் பொதுத் திறைசேரியின் அனுமதி இன்றி வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு பொதுத் திறைசேரியினைப் போன்றே தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது. | பொதுத் திறைசேரியின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்ட கடிதங்களின் பிரதிகள் கணக்காய்வுக்கு வழங்கப்படுதல் வேண்டும். |
| ii. | திருத்தப்பட்ட ஊக்குவிப்பு கொடுப்பனவு முறைமையில் நிபந்தனைகள் உள்ளடங்கிய கொடுப்பனவு முறைமை தொடர்பான அறிவுறுத்தல் உள்ளடக்கப்பட்டு திணைக்களத் தலைவரினால் சுற்றறிக்கை ஒன்று வழங்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அறிவுரைகள் அடங்கிய சுற்றறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவு முறைமைக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் மற்றும் அந்த அனுமதியில் அடங்கியுள்ள நிபந்தனைகள் மற்றும் ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவு முறைமை தொடர்பான அறிவுரைகள் உள்ளடக்கப்பட்ட சுற்றறிக்கை ஒன்றினை எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | திருத்தப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைமையின் நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகள் உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவு முறைமை தொடர்பான சுற்றறிக்கை வழங்கப்படுதல் வேண்டும். |
| iii. | ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவு முறைமை வருடந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஊக்குவிப்புத் தொகை பெற்றுக் கொள்வதற்கு இலக்காக கொள்ளப்பட்ட எல்லையினை அறிமுகப்படுத்தியிருந்த போதிலும், ஊக்குவிப்புத் தொகை கணக்கீடு செய்யும் போது அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருந்த போதிலும் 2023 | இலக்காக கொள்ளப்பட்ட எல்லைகள் தொடர்பில் உரிய பிரிவுகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட 50 சதவீத ஊக்குவிப்புத் தொகையில் 20 சதவீதம் அல்லது 30 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கு நேரடியாக செலுத்தப்படுகின்றது எனவும், மீதி சதவீதம் உத்தியோகத்தர்கள் தனித்தனியாக அல்லாது பிரிவு ரீதியாக ஈட்டிக் கொள்ளுதல் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவு வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் , ஊக்குவிப்புத் தொகை கணக்கீடு செய்தல் மற்றும் கொடுப்பனவு செய்தலின் போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலக்காக கொள்ளப்பட்ட எல்லைகள் தொடர்பில் |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டினுள் ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவாக ரூபா. 208,792,974 செலுத்தப்பட்டிருந்தது. | | கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். |
| (உ) | 2017 திசெம்பர் 22 ஆம் திகதி CCTV கமெரா கொள்வனவு செய்வதற்காக ரூபா. 1,330,550 உம் பொருத்துவதற்காக ரூபா. 829,903 உம் என மொத்தமாக ரூபா. 2,160,453 ஆன தொகை செலவிடப்பட்டு 62 கமெராக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த கமெராக்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 06 வருட காலமாக களஞ்சியசாலையில் செயற்பாடின்றி வைக்கப்பட்டிருந்தன. | இந்த வருடத்தில் பிரதான அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களுக்கு CCTV ஒழுங்கமைப்புகளை பொருத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதனால் இந்த வருடத்தில் பொருத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள CCTV கமராக்களை செயற்பாடின்றி வைத்திருக்காது உரிய இடங்களில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | திணைக்களத்தினால் வெற்றுக் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்கு 2003 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டிருந்த தனியார் நிறுவனத்திடம் இருந்து சுமார் 21 வருட காலமாக விலைக்கேள்வி கோரப்படாது நீடிக்கப்பட்ட விநியோகம் வழங்கப்பட்டு பெறுகை செயற்பாட்டிற்கு முரணாக வெற்றுக் கடவுச்சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. வெற்றுக் கடவுச்சீட்டுகளின் தேவைப்பாட்டினைக் கவனத்தில் கொள்ளாது இந்த கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் விநியோகிப்பதற்குத் தேவையான கடவுச்சீட்டு எண்ணிக்கையானது தேவைப்பாட்டிற்குப் பொருத்தமான மட்டத்தில் இல்லாமையே கடவுச்சீட்டு விநியோகத் தாமதத்திற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது. | இலக்கம் 23/1271/626/008-1 கொண்டதும் மற்றும் 2023.07.17 ஆம் திகதி இடப்பட்டதுமான அமைச்சரவை அனுமதிக்கு அமைய நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகை குழுவினால் தெரிவு செய்யப்பட்ட விலை மனுதாரருக்கு இலத்திரனியல் கடவுச்சீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கான பெறுகையினை வழங்குவதற்கு 2024.04.08 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டலுக்கு அமைய விலைக் கேள்வி கோரப்பட்டு நிறுவனத்தின் தேவைப்பாட்டிற்கு பொருத்தமான வகையில் வெற்று கடவுச்சீட்டுகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | திணைக்களத்தினால் வெற்றுக் கடவுச்சீட்டுக்கள் உரிய காலப் பகுதியினுள் கொண்டுவரப்படாததால் ஏற்பட்ட வெற்றுக் கடவுச்சீட்டு தட்டுப்பாட்டினால், கடவுச்சீட்டுகளை வான் வழியாகக் கொண்டு வருவதற்கு வான்வழி பொருட்கள் | அதிக அளவிலான கடவுச்சீட்டு கேள்வியின் காரணமாக அப்போது இருந்த தொகையானது ஒரு சில நாட்களுக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது என்பதனால் திட்டமிடப்பட்ட வகையில் இருப்பு கிடைக்கும் | வெற்றுக் கடவுச்சீட்டுத் தேவைப்பாட்டிற்கு சரியாக கொள்வனவு செய்வதல் இனம் காணப்பட்டு களஞ்சியப்படுத்தி |

| | | | |
|---|---|---|---|
| | போக்குவரத்து, ஆவணங்கள் மற்றும் மேலதிக வேலைக் கட்டணமாக USD 33,672 ஆன தொகையினைத் தனியார் நிறுவனத்திற்கும், கப்பல் நட்ட ஈட்டுக் கட்டணமாக ரூபா. 322,952 ஆன தொகையினை இலங்கை வங்கிக்கும், உள்நாட்டு கப்பல் முகவர் ஆவணக் கட்டணத்தின் மீள் கொடுப்பனவாக ரூபா. 58,652 ஆன தொகையினை விநியோகத்தருக்கும் செலுத்துவதற்கு நேரிட்டிருந்ததனால் திணைக்களத்திற்கு ரூபா. 13,184,416 மேலதிக செலவினை ஏற்க நேரிட்டிருந்தது. | வரையில் தேவையான கடவுச்சீட்டுத் தொகையினை வான் வழியாகக் கொண்டு வருவதற்கு நேரிட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | தேவைப்பாட்டிற்குப் பொருத்தமான வகையில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஏ) | இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் பத்திரங்கள், பதிவு செய்யப்பட்டதன் பின்னர் பதவி நிலை உத்தியோகத்தரினால் பரீட்சிப்பு செய்யப்பட்டு ஒழுங்கமைப்பிற்குத் தரவுகளை உள்ளடக்குவதற்கு 10 மாதங்கள் தொடக்கம் 14 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்ததுடன், அந்த விண்ணப்பப் பத்திரங்களில் இனம் காணப்பட்ட குறைபாடுகளை விண்ணப்பதாரிக்கு இலத்திரனியல் தகவல் மூலம் அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கோவை பதிவு செய்யப்பட்டதன் பின்னர் புலனாய்வுப் பிரிவின் அறிக்கையைக் கோருவதற்கான விண்ணப்பப் படிவத்தினை தேசிய புலனாய்வுப் பிரிவிற்கு அனுப்பியதன் பின்னர் கோவையானது அனுமதிக்காகப் பதவி நிலை உத்தியோகத்தரிடம் [பிரதிக் கட்டுப்பாட்டாளர் (I)] அனுப்பப்படும். அதன் பின்னர் குறைபாடுகள் இல்லாத விண்ணப்பப் படிவங்கள் தரவு ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுதல் இடம்பெறும் எனவும் ஒரு மாதத்தில் ஆயிரக்கணக்கான விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கின்றன எனவும், அதற்காக இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் குடியுரிமை பிரிவில் கடமைகளுக்கு மேலதிகமாகக் கடவுச்சீட்டுப் பிரிவில் கடமைகளுக்கும் ஈடுபடுத்தப்படுவதனால் இரட்டைக் குடியுரிமைக் கோவைகளைப் பரீட்சிப்பதற்கு குறித்த காலம் தேவைப்படுகின்றது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் பதிவு செய்யப்பட்டு உரிய உத்தியோகத்தரினால் பரீட்சிப்பு செய்யப்பட்டு ஒழுங்கமைப்பினுள் தரவுகளை உள்ளடக்குதல் விரைவில் செயல்படுத்தப்பட வேண்டியதுடன், இனம் காணப்பட்ட குறைபாடுகளை விண்ணப்பதாரிக்கு இலத்திரனியல் தகவல் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2023 ஆம் ஆண்டினுள் இரட்டைக் குடியுரிமையை பெற்றுக் கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பப் படிவங்களுள், கணக்காய்வு தினம் வரையில் கணினி ஒழுங்கமைப்பினுள் பதிவு செய்தல் மட்டும் மேற்கொள்ளப்பட்டு 03 மாதம் தொடக்கம் 05 மாதம் வரையான காலம் கடந்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | விண்ணப்பப் பத்திரம் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட வேண்டிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் எனும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயத்திற்காக நீண்ட காலம் செல்லும் சந்தர்ப்பங்கள் உள்ளன என்பதுடன், அந்த தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாது மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட முடியாமையே இதற்கு காரணம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்களின் குறைபாடுகளை இலத்திரனியல் தகவல் (e-mail) மூலம் தெரிவிக்கப்பட்டு உடனடியாகப் பூர்த்தி செய்யப்பட்டு சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஒ) | இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கு உரிய சான்றிதழ்கள் விண்ணப்பதாரிக்கு வழங்குவதற்கு கணக்காய்வு தினம் வரையில் 04 மாதம் தொடக்கம் 10 மாதம் வரையான காலம் கடந்திருந்ததுடன், உரிய அனைத்து ஆவணங்களும் கணினி ஒழுங்கமைப்பினுள் பதிவேற்றம் (scan) செய்யப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | குறித்த கோவை பதிவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்கள் இருவர் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், தற்போது பாரிய அளவிலான இரட்டைக் குடியுரிமை கோவைகளின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன என்பதுடன், அரச விடுமுறை தினங்களிலும் பிரிவின் உத்தியோகத்தர்கள் சிலரை ஈடுபடுத்தி எதிர்காலத்தில் இந்த தாமதத்தினை முடிவுருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது. | இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கு உரிய ஆவணங்கள் கணினி ஒழுங்கமைப்பினுள் பதிவேற்றம் (Scan) செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஓ) | 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் இரட்டைக் குடியுரிமை பரிந்துரை செய்யும் குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த தொகையினை செலுத்துவதற்காக விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்த 6167 விண்ணப்பப் பத்திரங்கள் காணப்பட்டதுடன், முதலாவது சந்தர்ப்பத்தில் அனுப்பப்பட்டிருந்த இலத்திரனியில் தகவலைத் | குடியுரிமை பிரிவின் மூலம் பணத்தினை செலுத்துவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டதன் பின்னர் ஏதேனும் நியாயமான காலத்தினுள் (சுமார் 03 மாதங்கள்) பணத்தினை செலுத்தும் சந்தர்ப்பங்கள் பல உள்ளன எனவும், பணம் செலுத்தாத விண்ணப்பப் பத்திரங்களை ஒவ்வொன்றாகத் தெரிவு செய்து பணத்தினைச் | பணம் செலுத்தப்பட வேண்டிய கால எல்லை தீர்மானிக்கப்பட்டு அதனை விண்ணப்பதாரருக் குத் தெரிவித்து, விண்ணப்பதாரர்களு க்கு உரிய சான்றிதழை வழங்கியதன் |

| | | | |
|---|---|---|---|
| | தவிர வேறு நடவடிக்கை இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செலுத்துமாறு அனுப்புதல் மிகவும் சிரமமான நடவடிக்கை என்பதனால் 2024 ஆம் ஆண்டு தொடக்கம் காலாண்டிற்கு ஒரு தடவை வீதம் நினைவூட்டல் இலத்திரனியல் தகவலைத் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஊடாகத் தெரிவித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | பின்னர் அங்கீகரிக்கப்பட்ட வருமானத்தினைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஔ) | இனம் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் இலத்திரனியல் தபால் மூலம் விண்ணப்பதார் அறிவுறுத்தப்பட்ட போதிலும் அதற்குப் பதில் தெரிவிக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதனைக் குறித்த கோவைக்கு அமைய உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியாது இருந்தது. | குறைபாடுகளைத் தெரிவித்து அனுப்பி 2 மாதங்கள் கடந்ததன் பின்னர் இரண்டாவது தடவையாக தெரிவித்து அனுப்பியதற்கும் அது தொடர்பில் ஒரு மாதத்தினுள் பதில் பெற்றுக் கொள்ளப்படாவிட்டால் குறித்த உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | விண்ணப்பப் பத்திரங்களில் உள்ள குறைபாடுகள் விண்ணப்பதாரருக்கு சரியான முறையில் தெரிவிக்கப்பட்டு இருந்தனவா என்பது தொடர்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (க) | பரிந்துரை செய்யும் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரட்டைக் குடியுரிமைக்கான விண்ணப்பப் பத்திரங்களைக் குழுவினால் அங்கீகரிப்பதற்கு 03 மாதம் தொடக்கம் 06 மாதம் வரையான காலம் கடந்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இரட்டைக் குடியுரிமை விண்ணப்பப் பத்திரங்களைப் பரிந்துரை செய்யும் குழுவின் மூலம் தற்போது பாரிய அளவிலான விண்ணப்பப் பத்திரத் தொகைக்கான பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது எனவும், முன்னர் இருந்த தாமதத்தினைத் தவிர்த்துக் கொண்டு விரைவில் பரிந்துரைகளை வழங்குவதற்கு தேவையான வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | பரிந்துரை செய்யும் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரட்டைக் குடியுரிமைக்கான விண்ணப்பப் பத்திரங்கள் குழுவினால் தாமதமின்றி அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். |
| (ங) | தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் கணக்காய்விற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த அறிக்கைக்கு அமைய 2023 ஆம் ஆண்டினுள் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களுக்கு சாதாரண | விண்ணப்பப் பத்திரங்களை கணினி மயப்படுத்தும் போது இனம் காணப்பட்ட சிக்கல்கள் தீர்க்கப்பட்டு மீதி விண்ணப்பப் பத்திரங்களுக்கான கடவுச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டு விண்ணப்பதாரிகளுக்கு விரைவில் வழங்குவதற்கு | கிடைக்கப் பெற்றுள்ள கடவுச்சீட்டு விண்ணப்பப் பத்திரங்களுக்கான கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கு விரைவில் |

| | | |
|---|---|---|
| சேவையின் கீழ் 321,216 கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், வருடத்தினுள் அதில் 198,592 கடவுச்சீட்டுக்கள் அதாவது 62 சதவீதம் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் குடிவரவு மற்றும் குடிகல்வு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,318 ஆனபோதிலும், உண்மையான பதவியணியினர் 1,106 ஆக உள்ளதுடன், பதவியணி வெற்றிடங்கள் 212 ஆகக் காணப்படுகின்றது. | தற்போது 214 வெற்றிட எண்ணிக்கைகள் உள்ளன எனவும், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |